# புதுவை ஈஸ்ட் கோஸ்ட் மருத்துவமனையில்
# உறுப்பு உயிர் அணுக்கள் சிகிச்சை (Stem Cell Therapy) உதயம்

மனித உடலில் இருக்கும் அனைத்து உறுப்புகளும் உருவாவதற்கு மூலக்காரணமாக இருப்பது "ஸ்டெம் செல்" (Stem Cell) என்று சொல்லப்படும் ஆரம்ப கால (Beginning of Life) உயிர் அணு.

இந்த உறுப்பு உயிர் அணுக்களின் சிறப்பு அம்சங்கள் யாதெனில்,

1. இவை ஒன்று இரண்டாகும், இரண்டு நான்காகும், நான்கு எட்டாகும், எட்டு பதினாறு ஆகும், பதினாறு முப்பத்திரண்டு ஆகும். இப்படி கணக்கில் அடங்காத அளவுக்கு கோடிக்கணக்கில் பெருக வல்லது.
2. இந்த உறுப்பு உயிர் அணுக்கள், எண்ணிக்கையில் மட்டுமல்லாது, உடலில் உள்ள அனைத்து உறுப்புகளையும் உருவாக்கும் திறன் கொண்டவை.
3. இவைகள் பாதிக்கப்பட்ட உறுப்புகளில் உள்ள கோளாறு மற்றும் பழுதடைந்த பாகங்களை சரி செய்து, சீராக்கி அந்த அந்த உறுப்புகளின் இயல்பான தன்மைகளை மீண்டும் கொண்டுவர வல்லது.
4. என்றும் இளமையோடு இருக்கும் இந்த உயிர் அணுக்களுக்கு வயதும் இல்லை, இறப்பும் இல்லை.

மேலே சொல்லப்பட்ட இந்த அரிய சிறப்பு அம்சங்களை இந்த உயிர் அணுக்கள் கொண்டு இருப்பதாலேயே இவைகள் பலதரப்பட்ட தீர்க்க முடியாத வியாதிகளை தீர்க்க பயன்படுத்தப்படுகின்றன. உதாரணத்திற்கு, கல்லீரல் பாதிக்கப்பட்டு கடைசி கட்டத்தில் மாற்று அறுவை சிகிச்சை (Liver Transplant) தேவைப்படும் நிலையில் கூட இந்த உறுப்பு உயிர் அணுக்களை உள்ளே செலுத்தி குணம் அடையச் செய்ய முடியும்.

**"ஸ்டெம் செல்" சிகிச்சையால் குணம் அடையும் முக்கிய சில வியாதிகள்:**

1. நீண்ட நாள் கல்லீரல் செயல் இழப்பு- Chronic Liver Failure (Cirrhosis of Liver & Chronic Hepatitis)
2. தீராத இரத்தசோகை (Aplastic Anaemia) உள்ளிட்ட இரத்தம் சார்ந்த நோய்கள்.
3. வயோதிகம் மற்றும் முதுமை (Senilism and Ageing) -யால் ஏற்படும் "ஆரோக்கிய குறைபாடுகள்".
4. தீராத குடல் வியாதிகள் (Inflammatory Bowel Diseases)
5. வாழும் வரை இருக்கும் நீண்ட நாள் வியாதிகள்- இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை வியாதி (Hypertension, Diabetes Mellitus)
6. பிறவி குறைபாடுகள்- Muscular Dystrophy including Cardio Myopathy.
7. ஆண், பெண் மலட்டுத்தன்மை மற்றும் ஆண்மை, பெண்மை குறைவு.
8. நரம்பியல் வியாதிகள்- Alzheimer's Disease, Parkinson's Disease மற்றும் பல.
9. இரத்த ஓட்ட குறைவால் ஏற்படும் தீராத கால் புண்கள் (Critical Limb Ischaemia and "Kissing" Ulcers)
10. முடக்கு மற்றும் மூட்டு வாதம் (Rheumatoid arthritis, Lupus Erythematosus, etc.,)

வரும் நாட்களில், இன்னும் பல்வேறுவித நோய்களுக்கும் இந்த சிகிச்சை முறை ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

"எம்ப்ரோ செல்" (Emprocell) என்று அழைக்கப்படும் மும்பை நிறுவனத்தோடு இணைந்து, இந்த உறுப்பு உயிர் அணு சிகிச்சை முறையை (Stem Cell Therapy) புதுவையில் அமைந்துள்ள ஈஸ்ட் கோஸ்ட் மருத்துவமனை ஆரம்பித்துள்ளது, "எம்ப்ரோ செல்" நிறுவனத்தின் Dr. அலெக்ஸ்சாண்டெர் குக்கர்சுக் (Dr. Oleksandr Kukharchuk) போன்ற உலக புகழ் பெற்ற மருத்துவர்களின் உதவியோடும், உக்ரெயின் நாட்டின் (Ukraine) தொழில் நுட்பத்தோடும் இந்த மருத்துவ சிகிச்சை ஈஸ்ட் கோஸ்ட் மருத்துவமனையில் தொடர்ந்து நீடிக்கும். இந்த சிகிச்சை முறையால் இந்தியாவில் மட்டுமல்ல வெளி நாடுகளிலே உள்ள பாதிக்கப்பட்ட நோயாளிகளும் பயன் பெறுவர்.

நாள் : 28-04-2013

**Dr. N. முருகேசன்,**
**தலைவர்**
**ஈஸ்ட் கோஸ்ட் மருத்துவமனை**
**புதுச்சேரி.**